PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# "திருச்சி மாநகரம் திருவெறும்பூரில் சோழரது கலைக்கோயில்"

**முனைவர் இரா. தேவி[1] & முனைவர். இராஜ. சீதாலட்சுமி[2]**

**[1] உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, அ.து.ம மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம்**

**[2] இசையிளாளர், சென்னை**

**ஆய்வுச்சுருக்கம்**

சோழர்கள் ஆட்சி செய்த பகுதிகள் சோழநாடு என அழைக்கப்படுகிறது. துவக்கத்தில் காவேரிப்பூம்பட்டினத்தை தனது தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள், பின்னர் இவ்வூர் கடல் சீற்றத்தினால் அழிந்த பிறகு, தலைநகரை திருச்சி மாநகரத்தில் உறையூருக்கு மாற்றினர். கடலிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள இந்நகரின் காவேரிக்கரையோரம் சிவாலயங்கள் பல எடுப்பித்தனர். அவ்வகையில் முற்காலச் சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தில் திருச்சியில் எடுப்பிக்கப்பட்ட கற்றளிகள் பலவற்றில் திருவெறும்பூர் எறும்பீசுவரர் கோவில் மலைமீது அமைக்கப்பட்டது ஆகும். இதில் இம்மன்னனது சிறப்பான கலையம்சங்கள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**:

முதலாம் ஆதித்தனின் கற்றளிகள் **பலவற்றில்** இவ்வாய்விற்குரிய திருச்சி வட்டத்தில் அமைந்துள்ள திருவெறும்பீசுவரர் கோயிலின் மற்றும் கலைக்கூறுகளை வெளிப்படுத்துவதுடன் ஒப்பீட்டு முறையில் இவற்றில் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

பிப்பிலீசுவரம், திருவமுது, தோரணம், தேவதானம், மீகோலை நாடு

**முன்னுரை:**

**உருவ வழிபாடு**

இந்தியக் கலையில் காணப்படும் உருவ வழிபாடானது புத்த மதத்திலிருந்து பெறப்பட்டது என்பது ஓர் பொதுவான செய்தியாக விளங்குகிறது. ஆனால் , இதற்கு முந்தைய சிந்து சமவெளி நாகரிகக் காலத்தில் சிவ வழிபாடு (உருவ வழிபாடு) என்பது பசுபதி வழிபாடாகவும், வேதகாலத்தில் 'ருத்திரன்' வழிபாடாகவும் இருந்து வந்துள்ளது.

தமிழகத்தில் இவ்வழிபாடு இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சங்ககாலம் முதற்கொண்டு உள்ளது. இருப்பினும் கலை என்ற நிலையில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனது காலத்தில்தான் ஒரு சில குடைவரைக் கோயில்களில் கருவறைப் படிமமாக வைத்து வழிபடப்பட்டது. பல்லவரது குடைவரைக் கலைப்பாணி கட்டுமானமாக மாற்றம் பெற்ற பிறகு , அனைத்துச் சிவாலயங்களிலும் கருவறைப் படிமமாக சிவலிங்கம் அமைக்கப்பட்டது. இக்கலைப்பாணி தொடர்ந்து வந்த சோழரது. ஆட்சியிலும் முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

அவ்வகையில் முற்காலச் சோழ மன்னர்களில் முதலாம் ஆதித்தன் காலத்தில் தமிழகத்தில் ஏறக்குறைய 47 கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் பல தஞ்சை மண்டலத்தில் காவிரியின் வட மற்றும் தென்கரைகளில் அமைந்துள்ளன. தற்போதைய திருச்சி வட்டம் சோழர் காலத்தில் தஞ்சை மண்டலத்துடன் இணைந்திருந்த நிலையில் ,

இப்பகுதியில் பல கற்றளிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் வரலாறு , இலக்கியம், கல்வெட்டுகள், கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆகிய சிறப்புகள் பெற்று விளங்கும் இக்கோயில் **"திருச்சி மாநகரம் திருவெறும்பூரில் சோழரது கலைக்கோயில் "** என்னும் தலைப்பில் இவ்வாய்விற்குரியனவாக அமைந்துள்ளன.

**ஊர்ப் பெயர்க் காரணம்**

திருச்சிராப்பள்ளி என்னும் பெயர்க்காரணம் தொடர்பாகப் பல்வேறு மாறுபட்ட புராணக்கதைகளும் செவிவழிச் செய்திகளும் கூறப்படுகின்றன. இலங்கை வேந்தன் இராவணன் மகனான 'திரிசிரா' என்ற அரக்கன் இவ்வூரை ஆண்டதால் இவ்வூர் பள்ளி(கிராமம்) என்ற பின் ஒட்டுடன் இணைந்து திருச்சிராப்பள்ளி என அழைக்கப்பட்டது.

சங்க காலத்தில் இவ்வூர் பற்றி குறிப்பிடும் இலக்கியங்களில் உறையூர் என்பதே தலையிடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'Periplus of Erythrean Sea' என்ற நூலில் உறையூர் என்பது 'Aragaru' **எனக்** கூறப்பட்டுள்ளது.[1] இவ்வூரை நாயன்மார்கள் தங்களுடைய பதிகங்களில் 'சிராப்பள்ளி' என்றே குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாகத் திருஞானசம்பந்தர் இத்தலத்தைத் 'துறைமல்கு சாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச் சிறைமல்கு வண்டுந் தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளி ' எனப் பாடியுள்ளார்.[2]

**திருவெறும்பூர் எறும்பீசுவரர் கோயில்**

இக்கோயில் திருச்சி-தஞ்சை நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள திருவெறும்பூரில் , சாலையில் இடப்புறம் சற்று உள்ளடங்கிக் காணப்படும் குன்றின் உச்சியில் அமைந்துள்ளது. **திருவெறும்பூர்**, **பிரமபுரம்**, **இலட்சுமிபுரம்**, **மதுவனபுரம்**, **இரத்தினக்கூடம்**, **குமாரபுரம்**, **பிப்பிலீசுவரம்** மற்றும் **தென்கைலாயம்** எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்ட இவ்வூர் **விளநாடு**,

ISSN: 2582-9513

**வடகவிரநாடு** மற்றும் **மீகோலை நாடு** எனப் பல்வேறு நாடுகளின் கீழ் அமைந்திருப்பதை இக்கோயில் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது.

இந்திரன் தலைமையில் தேவர்கள் இக்கோயில் இறைவனை வழிபட வரும் வேளையில் அங்கு கரன் என்னும் அரக்கனைக் கண்டு அஞ்சி சிவனிடம் வேண்டினர். சிவன் , அவர்களை எறும்பு உருவாக மாற்றித் தன்னை வழிபடச் செய்ததால் எறும்பீசுவரர் என அழைக்கப்பட்டார் என்பது இக்கோயில் தல புராணமாக அமைந்துள்ளது .

இக்கோயில் இறைவன் **தென்கைலாய மகாதேவர் , மலைமேல் மகாதேவர், திருவெறும்பியூர் ஆழ்வார் , மலைமேல் உள்ள திருவெறும்பியூர் ஆழ்வார் , திருவெறும்பியூர் திருமலைமேல் ஆழ்வார், தென்கைலாயம் மகாதேவர் , திருவெறும்பியூர் ஆழ்வார் திரிபுவன சுந்தரர் , திருஎறும்பீசுவரம் உடைய மகாதேவர் , திருவெறும்பூர் உடைய நாயனார் , மணிகூடாசலபதி** மற்றும் **மதுவனேசுவரர்** என வழங்கப்பட்டுள்ளார். இறைவி நறுங்குழல் நாயகி எனும் பெயருடன் விளங்குகிறார்.

**இலக்கியச்சான்றுகள்**

பன்னிரு திருமுறைகளின் தொகுப்பான தேவாரம் சிவனின் பல்வேறு கோலங்களை வெளிப்படுத்தும் பக்தி இலக்கியமாக அமைவதுடன், பாடப்பெற்ற கோவிலுக்குரிய வரலாற்றுச் சான்றாகவும் அமைகிறது. இதன் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தராலும், அடுத்த மூன்று திருமுறைகள் திருநாவுக்கரசராலும் இயற்றப்பட்டுள்ளன.

திருவெறும்பூர் இறைவன் குறித்து திருநாவுக்கரசர் தனது 5ஆம் திருமுறையின் 74ஆம் பதிகத்தில் 10 பாடல்களும், 6ஆம் திருமுறையின் 91ஆம் பதிகத்தில் 10 பாடல்களும் பாடியுள்ளார். இவை திருத்தாண்டகம் என்னும் செய்யுள் வகையில் அமைந்துள்ளன.

இவர், தனது பாடல்களில் , வெண்தலையைக் கையிலேந்தி பிட்சாடனர் கோலத்தில் விளங்குவதை 'இரும்பின் ஊறல் ஆராததோர் வெண்தலை[3] என்றவாறும், அர்த்தநாரீசுவரர் கோலத்தில் காட்சி அளிப்பதைப் 'பொருந்து பூண்முலை மங்கைநல் லாளொடும் [4], 'மறங்கொள் வேல்கண்ணி வாள்நுதல் பாகமாய் [5], 'மருவைவென்ற குழல்மடவாள் பாகம் வைத்த[6], என்றவாறும் எடுத்துரைக்கின்றார்.

மேற்குறிப்பிட்டவாறு சிவனின் பல்வேறு தோற்றங்களை வெளிப்படுத்தும் திருநாவுக்கரசர் , இக்கோயிலில் நறுங்குழல் நாயகி எனும் பெயருடன் விளங்கும் தேவியுடன் சிவன் காட்சியளிக்கும் கோலத்தை 'நறுங்கு ழல்மட வாளொடு நாள்தொறும் ' எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு திருநாவுக்கரசரின் பாடல்கள் சிவனின் அர்த்தநாரீசுவரர், கங்காதரர், திரிபுராந்தகர், இடபாரூடர் நடராசர் மற்றும் கோலங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளன.

**வரலாற்றுப்பின்னணி:**

தமிழக வரலாற்றை அறிவதற்குத் தொல்பொருள் சான்றுகள் , இலக்கியங்கள் மற்றும் அயல்நாட்டவர் குறிப்புகள் ஆகியன முதன்மைச் சான்றுகளாக விளங்குகின்றன. இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் சங்க காலம் தமிழக வரலாற்றின் தொடக்கமாக அமைவதுடன் அக்கால இலக்கியங்கள் சோழரது வரலாற்றை அறியவும் உதவுகின்றன.
சோழர்கள் எனும் அரச மரபை சேர்ந்தவர்கள் சூரியனின் வழிவந்தோர் எனக் கருதப்பட்டது. ‘சோழ’ என்ற சொல்லுக்கு சுழற்சி (அ) வட்டமிடும்

என்பது பொருளாகும். ஆதலால் 'சோழ' என்பது வட்டமிடுவோர் என பொருள்படுவதாக கூறப்படுகிறது.[7]

**மௌரியப் பேரரசன் அசோகரது (கி.மு. 272- 232)** கல்வெட்டுகளில் காணப்படும் தமிழக மூவேந்தர்களைப் பற்றிய குறிப்புகளில் சோழ அரச மரபே முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்முதலாக சோழர்கள் பற்றிய செய்திகளை அசோகரது 2 மற்றும் 13வது பாறைக் கல்வெட்டு மூலமும், கலிங்க நாட்டைச் சேர்ந்த காரவேலனின் (கிபி இரண்டாம் நூற்றாண்டு) உறதிக்கும்பா கல்வெட்டின் வாயிலாகவும் அறிய முடிகிறது.[8]

## விசயாலய சோழன்

சோழப் பேரரசை முதன்முதலில் நிறுவிய மன்னன் விசயாலயன் ஆவான். இவன் முத்தரையர் வம்சத்துக் கடைசி மன்னனான இளங்கோ முத்தரையனை வென்று தஞ்சையைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. இதன் நினைவாகத் தஞ்சையில் தன் குலதெய்வமான **நிசும்பசூதனிக்கென கோயில்** ஒன்றை எடுப்பித்தான். இவன் '**தஞ்சை கொண்ட பரகேசரி** 'என்றும் தஞ்சைக்கோன் என்றும் அழைக்கப்படுகிறான்.

## முதலாம் ஆதித்த சோழன் (கி.பி. 871 - 907 )

விஜயாலய சோழனுக்குப்பின் அவனது மகன் முதலாம் ஆதித்தசோழன் கி.பி. 871 லிருந்து கி.பி. 907 வரை ஆட்சி புரிந்தான். ராஜகேசரி என அழைக்கப்பட்ட இவன் 'கோதண்டராமன்' என்ற பெயரை கொண்டிருந்ததாகவும் கன்னியாகுமரிக் [9] கல்வெட்டு குறிப்பிடுகிறது. கி.பி. 879ல் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருப்புறம்பியம் என்னுமிடத்தில் பல்லவ மன்னன் அபராசிதவர்மனுக்கும் , பாண்டிய மன்னன் வரகுண பாண்டியனுக்கும் இடையே நடைபெற்ற போரில் அபராசிதவர்மனுக்கு ஆதரவாக ஈடுபட்டான். இதனைத்தொடர்ந்து

ISSN: 2582-9513

முதலாம் ஆதித்தன் அபராசிதனுடன் கி.பி. 890ல் போரிட்டு தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினான்.

முதலாம் ஆதித்தன் காலத்திய கோயில்களில் திருநெடுங்களம் (நெடுங்களநாதர் கோயில்) , திருவெறும்பூர் (எறும்பீசுவரர் கோயில்) , உறையூர் (பஞ்சவர்ணேஸ்வரர் மற்றும் தான்தோன்றீஸ்வரர் கோயில்கள்) கண்ணனூர் (பாலசுப்பிரமணியர் கோயில்) , திருக்கட்டளை (சுந்தரேஸ்வரர் கோயில்) , ஸ்ரீனிவாசநல்லூர் (குரங்கநாதர் கோயில்) , ஆலம்பாக்கம் (கைலாசநாதர் கோயில்) , மேல்பழுவூர் (சுந்தரேஸ்வரர் கோயில்), திருப்பராய்த்துறை (தாருகாவனேஸ்வரர் கோயில்) , கும்பகோணம் (நாகேஸ்வரர் கோயில்) , கோயிலடி (திவ்யஞானேஸ்வரர் கோயில்) போன்ற இடங்களில் இவனால் எடுப்பிக்கப்பட்ட சிவாலயங்கள் சிறப்பு உடையனவாக விளங்குகின்றன.

## கல்வெட்டுச் செய்திகள்

### முதலாம் ஆதித்தனின் கல்வெட்டுகள் (கி.பி. 871 முதல் 907)

திருவெறும்பூர் கோயிலில் இவனது மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் நான்காம் ஆட்சி ஆண்டைச் (கிபி 875) சேர்ந்த கல்வெட்டு , ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்தில் , தென் கயிலாயத்தில் மகாதேவர் கோயிலில் , அதிகாலை பொழுதில் இறைவனுக்கு விளக்கேற்றவும் , இறைவனின் திருமஞ்சனத்திற்கு நாள்தோறும் ஒரு குடம் நீர் கொண்டு வரவும் , திருவரங்கத்தைச் சேர்ந்த சேந்தன் செய்யவாய் மணி எனும் தேவரடியாள் 10 கழஞ்சு பொன் தானம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.[10]

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டு, ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கல ஆளுங்கணத்தைச் சேர்ந்த திருமிக்குடி அகத்யான் நாராயணன் நக்கன் என்பவரின் மனைவி தட்டன்சேந்தி என்பவர் **மலைமேல் ஆதித்த பட்டாரகருக்குக்** கோயில்

ISSN: 2582-9513

எடுப்பித்ததையும், இறைவனுக்குரிய திருவிளக்கிற்கும் திருவமுதுக்கும் நெய்யமுதுகுமாக 6 மாநிலம் தானம் அளித்த செய்தியையும் , விளக்குகிறது..[11]

இரண்டாவது கல்வெட்டு, மலைமேல் உள்ள மகாதேவர் கோயில் இறைவன் முன்பு பகற்பொழுதில் விளக்கெரிக்க எருமணம் பிடரஞ்செய் எனும் ஊரைச் சேர்ந்த சன்னசர்மன் என்பவர் $1^{1}/_{2}{}^{1}/_{2}$ மா நிலம் தானமாகத் தந்ததையும் , இந்நிலமானது இவ்வூர்ப் பெருங்குறி சபையினால்[12] இறையிலி[13] நிலமாக மாற்றப்பட்ட செய்தியையும் குறிப்பிடுகிறது. மேற்கூறிய இக்கல்வெட்டுகளில் பொன் மற்றும் நிலம் தானம் அளிக்கப்பட்ட செய்தியும் , மலைமேல் இக்கோயில் எடுப்பிக்கப்பட்ட செய்தியும் காணப்படுகின்றது.

**முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-955)**

இவ்வாய்விற்குரிய திருவெறும்பூர்க் கோயிலில் காணப்படும் இவரது நான்கு கல்வெட்டுகளில் , 30-ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில், ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்தில் **தென் கைலாயத்து மகாதேவர்** கோயிலில் விளக்கெரிக்க எறும்பூரைச் சேர்ந்த ஒருவர் நிலம் தானம் அளித்த செய்தி காணப்படுகிறது.[14]

அடுத்து இவனது 36 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று, தென்கரையிலுள்ள **பிரம்மதேயமான**[15]. ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கல பெருங்குறி சபாவினால் 15 கழஞ்சு பொன் பெறப்பட்டு, சாத்தன் தணக்கன் என்பாருக்கு நிலம் விற்கப்பட்டதும் பின்னர் இவரிடமிருந்து மேலும் 15 கழஞ்சு பொன் பெறப்பட்டு , இந்நிலமானது இறையிலி நிலம் ஆக்கப்பட்டு , இக்கோயிலில் இவரால் நிறுவப்பட்ட **உமா பட்டாரகி** திருமேனியின் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட செய்தியும் விளக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய இக்கல்வெட்டுகளில் கொடை அளிக்கப்பட்டமை , புதிய படிமங்கள்

ISSN: 2582-9513

நிறுவப்பட்டமை தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. இதன் மூலம் முதலாம் பராந்தகன் இக்கோயில் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை அறிய முடிகிறது.

**கண்டராதித்த சோழன் (கி.பி. 951-957):**

திருவெறும்பூர் கோயிலில் இடம் பெற்றுள்ள இவனது மூன்றாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டு, **திருமலை ஆழ்வார்** கோயிலுக்கு ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலப் பெருங்குறி சபா மற்றும் **தேவதானமான**[16] எறும்பூரைச் சேர்ந்த மக்களால் நிலம் விற்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது.[17]

மேலும், கிளியூர் நாட்டிலுள்ள சிறுதாவூரைச் சேர்ந்த வேளாண் வீர நாராயணன் செம்பியன் வேதிவேளாண் இக்கோயிலுக்காக இந்நிலத்தை வாங்கி, இந்நிலம் மீதான வரி விலக்கு செய்ய சபா மற்றும் ஊரைச் சேர்ந்தோர், இவரிடமிருந்து குறிப்பிட்ட அளவு தங்கம் பெற்று இந்நிலம் கோயிலில் திருப்பதிகம் ஓதும் நால்வரின் பராமரிப்பிற்காக வழங்கப்பட்ட செய்தியையும் விளக்குகிறது.[18]

இவனது ஐந்தாம் ஆட்சி ஆண்டுக் (கி.பி. 956) கல்வெட்டு, இதில், வேளாண் வீரநாராயணன் எனும் செம்பியன் வேதிவேளாண் என்பவர் ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கலம் சபாவிற்கு **இறைக்காவல் திரவியம்**[19] செலுத்தி, **திருவெறும்பியூர் ஆழ்வார் கோயில் மலைமீதுள்ள சத்திரத்தில்** (சோறிடும் சாலை) வாழும் 15 அந்தணர்களுக்கு தினமும் உணவிடும் பொருட்டு கொடையாக வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது. இதன் பின்னர், இந்நிலம் மீது எவரேனும் வரி விதிக்க முற்பட்டால் அவர்கள் பன்மாயேச்வர்களால் (சிவனடியார்கள் கூட்டம்) அபராதத்திற்கு உட்படுத்தப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இவனது ஆறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டில் ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த மாதவன்

ISSN: 2582-9513

சுப்பிரமணியன் என்பவர் இவ்வூர் மலைமேல் உள்ள கோயிலுடன் இணைந்த சத்திரத்தில் வாழும் வேதத்தில் தேர்ச்சி பெற்ற பிராமணர்களுக்கு அரிசி இரு நாழிகையும், காய்கறி ஒன்றும், நெல் அரைப்படியும், புளிக்கறியும், தயிர் உரியும், பாக்கு இரண்டும் வழங்கும் பொருட்டு நிலக்கொடை வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது. ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி சபையோர் மகரஞாயிற்று செவ்வாய்க் கிழமை அன்று இவ்வூர்த் திருச்சித்திர கூடத்தில் (ஊர்ப்பொதுமண்டபம்) கூடி, இவரிடமிருந்து வரிபெற்று இந்நிலம் மீதான வரியை நீக்கியதும், இக்கிராமத்தின் மத்தியஸ்தராகச் செயல்பட்ட தர்ம பிரியன் என்கிற கழிவிசையன் தருனேந்திர சேகரன் என்பவர் இதற்குரிய தீர்மானப் பத்திரத்தை எழுதியதும் குறிப்பிடப்பட்டுள்ளது.[20]

இவனது 7 ஆம் ஆட்சி ஆண்டை சேர்ந்த 5 கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டு, மலை மேல் உள்ள திருவெறும்பூர் ஆழ்வார் கோயில் சத்திரத்தில் இரண்டு பிராமணர்கள் மற்றும் 3 சிவயோகிகளுக்கு உணவிடும் பொருட்டு, வேங்கை இளைய உருத்திரகுமார கிராமவிட்டன் என்பவர் நிலம் வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது..[21]

மூன்றாவதாக கல்வெட்டு விளநாடு, **பிரம்மதேயமான** திருவேங்கூர் சபையைச் சேர்ந்தோர், செம்பியன் வேதிவேளானிடம் நிலம் விற்ற செய்தியினை தெரிவிப்பதாக அமைந்துள்ளது. மேலும், உத்தமசீலி சதுர்வேதி மங்கலத்தில் சிறு கிராமமான முருக்கூரில் உள்ள பகுதிகளுக்கு நீர்பாசன வசதியை அளிக்கும் கிளியூர் வாய்க்கால் இந்நிலத்தின் எல்லைப் பகுதியாக விளங்கிய செய்தியையும் இக்கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகிறது.[22]

**சுந்தரசோழன் (கி.பி. 957- 970)**

இம்மன்னன் வீரபாண்டியனை தோற்கடித்ததால் '**மதுரை கொண்ட ராஜகேசரி**' '**மதுராந்தகன்**' எனும் விருதுப் பெயர்கள் பெற்றதாகக்

ISSN: 2582-9513

கூறப்படுகிறது.

இவற்றில் முதல் கல்வெட்டு , இவனது 5 ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது ஆகும். இதில், ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலப் பெருங்குறி சபையை சார்ந்தோர் கி.பி. 961ஆம் ஆண்டு புதன்கிழமை அன்று , **திருவரம்பூர் ஆழ்வார் கோயிலில்** கூடி இக்கோயில் மற்றும் அதன் உடைமைகளுக்கு வரி விதிக்கக் கூடாது எனவும் , இதனை மீறுபவர்கள் கிராமத்தில் இருந்து வெளியேற்றபடுவதுடன் அவர்கள் மீது **'வண்ணாரப்பாறை'** எனப்படும் வரி விதிக்கப்பட வேண்டும் எனவும் , சிவனடியார்களைக் கொண்டு ஆணையை மீறுபவரிடமிருந்து தண்டமாகத் தங்கம் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[23]

இரண்டாவது கல்வெட்டு தென்கரை , பிரம்மதேயம், ஸ்ரீ கண்ட சதுர்வேதி மங்கலத்தில் **தென்கைலாயம் மகாதேவர் கோயிலில்** விளக்கு எரிக்க , பராமரிக்க, நம்பன்கேசவன் என்பவரால் 6 மா நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது.

**உத்தமசோழன் (கி.பி. 969- 985)**

இவனது 15 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு. இதில் , பிரம்மதேயமான ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்தில் , **திருவெறும்பியூர் ஆழ்வார் திரிபுவன சுந்தரர் கோயிலில்** , மத்தியகால பூசைக்குரிய திருவமுது, கறியமுது, நெய்யமுது 1/2 பிடி, தயிரமுது, காயமுது 2, வெற்றிலை எட்டு போன்ற பொருள்களின் தேவைக்காக , இவ்வூர் சபையோரிடமிருந்து வாங்கிய நிலத்தை செம்பியன் வேதிவேளாண் இக்கோயிலுக்குத் தானமாக வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது.[24]

இவனது 16ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில் , கவிரநாட்டில் **திருவெறும்பியூர் திருமலை ஆழ்வார் கோயிலில்** அர்த்தசாம வழிபாட்டிற்குரிய பொருள்களுக்காக இவ்வூர் மக்களால்

ISSN: 2582-9513

கயிலாய வாய்க்கால், கணவதி வாய்க்கால், அரைசை வாய்க்கால் எனும் மூன்று நிலப்பகுதிகள் அறக்கொடையாக வழங்கப்பட்ட செய்தி இடம்பெற்றுள்ளது.

**முதலாம் ராஜராஜ சோழன் (கி.பி. 985-1014)**

தனது ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகளைக் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் மெய்க்கீர்த்திகளாக பொறிக்கும் வழக்கத்தை முதன்முதலில் ஏற்படுத்தியவன் இராசராசன் . இவனது 4ஆம் ஆட்சி ஆண்டைச் (கி.பி. 989) சேர்ந்த கல்வெட்டில் , ஸ்ரீ கண்ட சதுர்வேதி மங்கலத்தில் உள்ள குன்றில் வேதத்தில் தேர்ச்சி பெற்ற 6 பிராமணர்களுக்கு உணவிற்காக இளதராயர் புகழ்விற்பவர் கண்டன் வீரசோழன் என்பவர் பணம் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.[25]

இரண்டாவதாக பதினொன்றாம் ஆட்சி ஆண்டைச் (கி.பி. 996) சேர்ந்த கல்வெட்டில் இம்மன்னன் , காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் கப்பல்களை அழித்தான் என கூறப்பட்டுள்ளது. மேலும் **திருமலை ஆழ்வார்** எனும் இக்கோயிலில் உள்ள **கணபதி சன்னதிக்கு** விளக்கு ஏற்றுவதற்காக, 34 ஆடுகள் தானமாக வழங்கப்பட்டதும், இக்கொடையை வழங்கியவர் இவ்வூர் ஆளுங்கணத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் ஒருவர் எனும் செய்தியும் இடம் பெற்றுள்ளது.[26]

இவரது 25ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 2010) கல்வெட்டில், தென்கரை, **பாண்டிகுலாசனி வளநாடு** [27], விளநாடு, பிரம்மதேயமான, ஸ்ரீ கண்ட சதுர்வேதி மங்கலத்தில் , திருவெறும்யூர் மலைமீதுள்ள திருமலையாழ்வார் கோயிலுக்கு விளக்கிற்காக 5 கழஞ்சு பொன் தானமாக வழங்கப்பட்ட செய்தி இடம் பெற்றுள்ளது.

ஏழாவது கல்வெட்டு இக்கோயில் **'திருமகள்போல'** எனும் இம்மன்னனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இவன் , காந்தளூர்ச்சாலையை அழித்து வேங்கை நாடு, கங்கப்பாடி, நுளம்பப்பாடி,

ISSN: 2582-9513

தடிகைப்பாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், இலங்கை மற்றும் இரட்டைப் பாடியை வெற்றி கொண்ட செய்தியோடு முடிவின்றி காணப்படுகிறது.[28]

**முதலாம் ராஜேந்திரன் (கி.பி. 1012 -1044)**

இவனது மூன்றாம் ஆட்சியாண்டைச் (கி.பி. 1015) சேர்ந்த முதல் கல்வெட்டில், ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கல ஆளுங்கணத்தைச் சேர்ந்த ஒருவர் **திருஎறும்பீசுவரம் உடைய மகாதேவர் கோவிலுக்கு** விளக்கெரிக்க எட்டு காசு தானமாக வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது.[29]

**விக்கிரமசோழன் (கி.பி. 1118 -1135)**

இவனது ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1127) **திருபுவனச்சக்கரவர்த்தி** எனும் சிறப்பு பெயரைக் குறிப்பிடுகிறது. அடைமொழி ஏதுமின்றி, ஆட்சி ஆண்டு குறிப்பிடப்படாமல் **'பூ மாது புணர'** எனும் இம்மன்னனின் மெய்கீர்த்தியுடன் துவங்கும் மற்றொரு கல்வெட்டில் நிலம் தானமாக வழங்கிய செய்தி காணப்படுகிறது.[30] மேற்கூறப்பட்ட இக்கல்வெட்டுகளில் இக்கோயில் இம்மன்னனது காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டு வந்தது என்பதும், நில தானம் மற்றும் இவனது மெய்க்கீர்த்தி குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

**இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1135- 1150)**

இவரது கல்வெட்டில், நிலம் கொடையாகத் தரப்பட்ட செய்தி, இம்மன்னனின் சிறப்புப் பெயர்கள், வெற்றிகள் மற்றும் நிலக்கொடை தொடர்பான செய்திகள் தெரிய வருகின்றன.

**மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216- 1256 )**

திருவெறும்பூர்க் கோயிலில் காணப்படும் இவனது மூன்றாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த முதல் கல்வெட்டில், தென்கரை,

ISSN: 2582-9513

பாண்டிகுலாசனி வளநாட்டின் உட்பிரிவான மீகோலை நாட்டில் பிரம்மதேயமான ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலம் '**மலாரி**' எனும் பெயரில் அழைக்கப்பட்ட செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.[31]

**கட்டடக்கலை**

பண்டைய தமிழகத்தில் கடவுளர்களும் , ஆவிகளும் உறையும் இடமாகக் கருதி ஆல் , அரசு, கடம்பு, பலா, வாகை, வன்னி, வேம்பு முதலான மரங்களை மக்கள் வழிபட்டனர். சிவனுக்குரியதாகக் கருதப்படும் ஆலமரத்தைச் சுற்றிலும் செங்கல்லாலான அமைப்பு இருந்ததையும், அதற்கு படையல் வைத்து வழிபாடு நடத்தியதையும் தமிழ் இலக்கியமான அகநானூறு குறிப்பிடுகிறது. இவை மரக்கோயில் எனும் நிலையில் மேற்கூரை ஏதுமற்ற திறந்த வெளிக் கோயில்களாக இருந்தன. இத்தகைய வழிபாட்டு இடங்கள் பொதியில் [32] அல்லது மன்றம் அல்லது முற்றம் என அழைக்கப்பட்டன. இவற்றில் வழிபாட்டிற்குரிய பொருளாகக் கந்து அல்லது கம்பம் ஒன்று நடப்பட்டிருக்கும். இதனைக் கந்துடைப்பொதியில் என அழைப்பர்.

மேலும், போரில் இறந்த வீரனின் நினைவாக அவ்விடத்தில் , கற்களால் ஆன கோவில் ஒன்றை அமைத்து வழிபடும் வழக்கமும் இருந்தது. இதனை நடுகல் வழிபாடு என்பர். இவ்வழிபாடு பிற்காலக் கோயில் வழிபாடு மற்றும் கட்டிடக்கலையின் வளர்ச்சிக்குரிய ஆதாரமாக அமைந்தது எனலாம். இவ்வாய்விற்குரிய இக்கோயிலின் கட்டடக் கலைகூறுகள் பின்வருமாறு வெளிக்கொணரப்படுகின்றன.

**திருவெறும்பூர் எறும்பீசுவரர் கோவில்**

**கோவில் அமைப்பு**

இக்கோயில் கருவறை , அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம், முதல்திருச்சுற்று, மடப்பள்ளி, திருச்சுற்று ஆலயங்கள் , நடராசர் மண்டபம், நவக்கிரகங்கள், சூரியன், சந்திரன், பைரவர், முருகன்,

ISSN: 2582-9513

முதல் திருச்சுற்று மதில் , கோபுரம், இரண்டாம் திருச்சுற்று , அம்மன் கோவில், கொடிமரம், பலிபீடம், நந்தி மண்டபம் மற்றும் நந்தவனம் ஆகியவற்றுடன் அமைந்துள்ளது.

**கருவறை**

இக்கோவில் கருவறை உட்புறம் 11 அடி பக்க அளவுடன் சதுர வடிவில் கிழக்கு நோக்கி அமையப்பட்டுள்ளது. இதன் மையப்பகுதியில் **சுயம்புலிங்கம்** அமைந்துள்ளது. கருவறை **விமானம் அதிட்டானம்** , **சுவர்ப்பகுதி**, **பிரஸ்தரம்**, **கிரீவம்**, **சிகரம்**, **ஸ்தூபி**, ஆகிய ஆறு அங்கங்களைக் கொண்டு ஏகதள விமானமாக அமைந்துள்ளது. இதன் நுழைவாயிலின் இருபுறமும் 2 அரைத்தூண்கள் சோழர் கலைப்பாணியில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அதிட்டானம்**

கருவறையின் வெளிப்புற அதிட்டானம் பாதபந்த அதிட்டானமாக அமைந்துள்ளது. முதலாம் மகேந்திரவர்மனது ஆட்சிக் காலத்தில் பொதுவாகப் பயன்பாட்டில் இருந்தது.[33]

முற்காலச் சோழர்களில் முதலாம் ஆதித்தன் காலத்துத் திருச்சிராப்பள்ளி திருத்தான்தோன்றீசுவரர் கோயில் , திருப்பழனம் ஆபத்சகாயேசுவரர் கோயில் , திருவேதிக்குடி வடபுரீசுவரர் கோயில் , திருப்பூந்துருத்தி புஷ்பவனேசுவர் கோயில் , கோயிலடி திவ்யஞானேசுவரர் கோயில் முதலானவற்றில் பாதபந்த அதிட்டானம் இடம்பெறுகிறது. இவற்றில் பல்லவரது அதிட்டான அமைப்புப் பின்பற்றப்பட்டு, இதனுடன் கூடுதலாக மேலும் ஒரு பட்டிகையும் , கம்பும், கண்டமும், கம்பும், சுவர்க்கண்டம் எனும் நிலையில் இணைக்கப்பட்டது.[34]

**தேவகோட்டம்**

தேவகோட்டம் என்பது கருவறை மற்றும் மண்டபங்கள் ஆகியவற்றின் சுவர்களில் இரு அரைத்தூண்களுக்கு இடையே இறைவனது உருவத்தை அமைப்பதற்கென உருவாக்கப்பட்ட மாடம் போன்ற பகுதியாகும்.

இக்கோயில் கோட்டங்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தி , மேற்கில் அரிஹரர் மற்றும் வடக்கில் பிரமன் ஆகிய சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. கோட்டத்தின் மேல்பகுதியை மேல்நோக்கி பத்மமும், சிறிய பட்டிகையும், தொடர்ந்து தோரணமும் அலங்கரிக்கின்றன.

தேவக்கோட்ட புடைப்புப் பகுதியின் இருபுறமும் காணப்படும் அரைத்தூண்கள் 6 1/2 அடி உயரத்துடன் அமைக்கப்பட்டுள்ளன இவற்றின் அடிப்பகுதி சதுரமாக விளங்க , தொடர்ந்து வரும் தண்டுப்பகுதி எண்பட்டை வடிவில் மாலாஸ்தானங்களுடன் காணப்படுகிறது. இதனை முத்துமாலை வடிவங்களும் , பூக்கள் மற்றும் கொடிகளாலான கருக்கு வேலைப்பாடுகளுடன் அலங்கரிக்கின்றன. மாமல்லபுரம், தர்மராச ரதத்தின் மத்திய தளத்தில் காணப்படும் அரைத்தூணின் தண்டுப்பகுதியில் மாலாஸ்தானம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.[35]

**பிரஸ்தரம்**

**பல்வேறு வடிவங்களில் பூதகணங்கள்**

கருவறையின் மூன்றாவது அங்கமான பிரஸ்தரத்தின் வலபிப் பகுதியில் காணப்படும் பூதகணங்கள் பல்வேறு வடிவங்களில் விளங்குகின்றன. அவ்வகையில் மத்தளம் , மேளம் தட்டுதல் , இசைக்கருவிகள் இசைத்தல், நாதசுரம் வாசித்தல், கைத்தாளம் இடுதல், படமெடுத்த நிலையில் உள்ள பாம்பை தலைகீழாகத் தொங்கவிட்டு அதனருகே கையைக் கொண்டு செல்லுதல் ஆகிய வடிவங்களுடன் , மனிதக் குரங்கு வடிவிலான பூதகணங்களும் காணப்படுகிறது. மேற்கில் தலைகீழாகத் தொங்கும் பல்லியின் வாலைப் பிடித்து வாயில்

வைத்திருத்தல், கைகளில் கத்தி, கேடயம் போன்ற ஆயுதங்கள் கொண்டு சண்டையிடுதல் போன்ற வடிவங்களில் தோற்றமளிக்கின்றன.

**கிரீவம்**

கருவறையின் நான்காவது அங்கமான கிரீவத்தின் நாற்புறமும் மையத்தில் தேவக்கோட்டங்கள் அமைக்கப்பட்டு, நான்கு முனைகளிலும் நந்தியின் அமர்ந்த வடிவங்கள் காணப்படுகின்றன. சிகரத்தின் அமைப்பினைக் கொண்டு இது வேசர வகையைச் சேர்ந்தது எனலாம்.

**சிகரம்**

கருவறையின் ஐந்தாவது அங்கமான சிகரம் வட்ட வடிவில் சுதையினால் அமைந்ததாக நாற்புறமும் மகாநாசிகைகளுடன் விளங்குகின்றன. முற்காலச் சோழ மன்னன் முதலாம் ஆதித்தன் காலத்திய கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில், கும்பகோணம் நாகேசுவரர் கோயில், திருவேதிக்குடி வேதபுரீசுவரர் கோயில் போன்றவற்றில் சிகர அமைப்பு வட்ட வடிவினதாக அமைந்துள்ளது.[36]

**ஸ்தூபி**

சிகரத்தின் உச்சியில் காணப்படும் ஒற்றைக் கலசம் கருவறையின் ஆறாவது அங்கமாக விளங்குகிறது.

**வட கயிலாயம்**

மலைக்கோயிலுக்குச் செல்லும் வழியில் குன்றின் இடப்புறம் அதிட்டானம் மற்றும் ஒரு சில தூண்களுடன் சிதைந்த நிலையிலான மண்டபம் காணப்படுகிறது. கல்வெட்டுகளில் கூறப்படும் ஊர்ப்பொதுமண்டபம் இதுவாக இருக்கலாம் என அறியப்படுகிறது. இதன் நேர்கோட்டில் குன்றின் அடிவாரத்திற்குச் சற்று மேலாக அமைந்துள்ள வடகயிலாயம் எனும் சிறிய கோவில் கருவறை, அர்த்த மண்டபம் மற்றும் சிறிய முன்மண்டபத்துடன் கிழக்கு நோக்கி காணப்படுகிறது.

இதன் மையத்தில் கைலாசநாதர் எனும் பெயரிலான லிங்கம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**சிற்பக்கலை**

'சில்' என்பது கல்லைக் குறிக்கும் சொல்லாகும். கல்லிலிருந்து வடிவம் பெறுவதால் அவ்வமைப்பு 'சிலை' என்று அழைக்கப்படுகிறது. சிலை என்பதன் தொடர்ச்சியாகச் 'சிற்பம்' எனும் சொல் உருவானது. இதேபோன்று 'படிமம்' என்பது ஒன்றிலிருந்து ஒன்று பெறப்படுவதைக் குறிப்பதாகும்.[37]

இந்தியாவில் தொன்மையான சிந்துசமவெளி நாகரிகக் காலத்தில் சுடுமண் முத்திரைகளில் கடவுளர் மற்றும் விலங்குகளின் உருவங்களும், தாய்த் தெய்வங்களாகக் கருதப்படும் சுடுமண் உருவங்களும் கிடைத்துள்ளன.[38] இதன்மூலம் கடவுளர் மற்றும் விலங்குகளின் உருவங்களைச் சிற்பங்களாக அமைத்து வழிபடும் வழக்கம் அக்காலத்திலேயே நிலவியதை அறியலாம்.

கடவுளர் வழிபாட்டைப் போன்றே கல்லில் மனித உருவம் பொறித்து வழிபடும் வழக்கமும் தமிழகத்தில் நிலவியது. அவ்வகையில் போர்க்களத்தில் இறந்த வீரனின் உடல்மேல் கற்களை அடுக்கி அவ்விடத்திலேயே அடக்கம் செய்தனர். இதனைக் கற்பதுக்கை , கல்திட்டை என அழைத்தனர் . இத்தகைய கற்பதுக்கைகளில் அவ்வீரனின் நினைவாக நடுகல் ஒன்றை நட்டு , அதில் அவனது பெயரைப் பொறிக்கும் வழக்கம் இருந்தது.[39]

**இலிங்கம்**

திருவெறும்பூர்க் கோயில் கருவறையில் காணப்படும் இலிங்கம் சுயம்பு லிங்கமாக இடப்பக்கம் 5 டிகிரி சாய்ந்த நிலையில் விளங்குகிறது. இதன் உச்சிப்பகுதி பிளவுபட்டும் , அருகில் குழிவான பகுதி , மற்றும் எறும்பு ஊர்ந்த தடங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆவுடையாருக்கு

ISSN: 2582-9513

மட்டுமே திருமுழுக்காட்டு நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

**தட்சிணாமூர்த்தி**

சங்க காலம் முதற்கொண்டு இவ்வழிபாடு காணப்படுகிறது. புறநானூற்றுப் பாடலில் வரும் 'ஆலமர் கடவுள் 'எனும் சொல் தட்சிணாமூர்த்தியைக் குறிக்கிறது.[40]

திருவெறும்பூர்க் கோயில் மையக் கருவறை தெற்குத் தேவகோட்டத்தில் அமைந்துள்ள தட்சிணாமூர்த்தி படிமம் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அமைந்துள்ளது. உயர்ந்த ஆலமரத்தின்கீழ் வீரசானத்தில் அமர்ந்து வியாக்கியான தட்சிணாமூர்த்தியாகக் காணப்படுகின்றார். நான்கு கைகளில் மேல் வலது கை நாகத்தையும் , இடது கை தீச்சுடரையும் , முன் வலது கை சின் முத்திரையில் அக்க மாலையையும், இடது கை சுவடியையும் கொண்டு விளங்குகிறது.

இவரின் இருபுறமும் , பக்கத்திற்கு இருவராக நான்கு முனிவர்கள் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர்.

**அரி அரர் (சங்கர நாராயணன்)**

அரியும், அரனும் (சிவன் , திருமால்) ஒன்றிணைந்த அரி அரர் படிமம் காணப்படுகிறது. அர்த்தநாரீசுவரர் படிமத்தில் உமைக்கு உரியதான இடப்பக்கம் , இங்கு அரிஉறரர் படிமத்தில் திருமாலுக்கு உரியதாக அமைந்துள்ளது. உமா , துர்கா (அ) தேவி ஆகியோர் திருமாலின் பெண் வடிவமாகக் கருதப்படுகின்றனர்.[41]

**துர்க்கை**

வேதகால இலக்கியங்களில் 'துர்கா' எனும் பெயர் இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது.[42] சங்க காலத்தில் பாலைநிலத் தெய்வமாக வணங்கப்பட்ட 'கொற்றவை' பிற்காலத்தில் 'துர்க்கை' என அழைக்கப்பட்டது. போருக்குச் செல்வோர் கொற்றவையின்

பெருமையைக் கூறி, அத்தெய்வத்தை வழிபட்டுச் செல்லும் நிலையானது கூறப்படுகிறது.

இக்கோயில் அர்த்த மண்டப வடக்குத் தேவகோட்டத்தில் அமைந்துள்ள நான்கு அடி உயர துர்க்கையின் படிமம் , நான்கு கைகளுடன், எருமைத் தலை மீதி சமபங்கத்தில் நின்ற நிலையில் காணப்படுகிறது.

**துவார பாலகர் (வாயிற் காப்போர்)**

துவாரம் என்பது கோயிலின் வாயிலைக் குறிக்கும் சொல்லாகும். இறைவனுக்கு வாயிற்காப்பாளராக விளங்கும் துவாரபாலகர்கள் பொதுவாக அர்த்தமண்டப மற்றும் மகாமண்டப நுழைவாயிலின் இருபுறமும் அரைத்தூண்களை ஒட்டியவாறும், கோபுரங்களின் முகப்பில் இருபுறமும் பக்கத்திற்கு ஒருவராக இங்கு காணப்படுகின்றனர்.

**சப்தமாதர்கள்**

தாய்த் தெய்வ வழிபாட்டின் ஒரு அங்கமாக சப்தமாதர்கள் வழிபாடு கருதப்படுகிறது. சப்தமாதர்கள் தாய்மார் எழுவர் , சப்தமாத்ரிகர்கள், கன்னிமார்கள், மேலும் பரிவார தேவதைகள் எனவும் கூறப்படுகின்றன. இக்கோயில் காணப்படும் சப்தமாதர் படிமங்கள் அமைவிடம் , முகத்தோற்றம் மற்றும் படிமக்கலைக்கூறுகளின் அடிப்படையில் இக்கோயிலின் சமகாலத்தைச் (கி.பி. 10 ஆம் நூ) சேர்ந்தவையாக , முற்காலச் சோழரது கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

**விநாயகர்**

முற்காலச் சோழர்களது கோயில்களில் கணேசர் படிமமானது பரிவார தேவதைகளில் ஒன்றாகத் தனிச்சன்னதியிலும் , பின் அர்த்த மண்டபத் தென்புற தேவகோட்டத்திலும் இடம்பெற்றுள்ளது.

ISSN: 2582-9513

திருவெறும்பூர்க் கோயில் முதல் திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிய தனிச்சன்னதியில் காணப்படும் விநாயகர் படிமம் பீடத்தின் மீது அமைந்துள்ளது.

**சுப்பிரமணியர்**

தமிழ்த் தெய்வம் எனப் போற்றப்படும் சுப்பிரமணியர் அறுவைச் சமயங்களுள் ஒன்றாகிய கௌமாரத்தின் கடவுளாகவும் விளங்குகின்றார். தமிழகத்தில் நிலவிவரும் முருக வழிபாடு , வேதகாலத்தில் ஸ்கந்த வழிபாடாக இருந்து வந்துள்ளது. கொற்றவையின் மகனாக முருகன் குறிப்பிடப்படுவதை 'வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ ' எனும் வரி விளக்குகிறது.

திருவெறும்பூர் கோயில் முதல் திருச்சுற்று மண்டபத்தின் மேற்குத் திசையில், கிழக்கு நோக்கியவாறு , பரிவார தெய்வங்களில் ஒன்றாக , ஆறுமுகம், பன்னிரு கைகளுடன் , மயிலின் மீது அமர்ந்து , சண்முகரது படிமம் காணப்படுகின்றது.

**சூரியன்**

வேதகாலத்தில் இந்திரன் , அக்னி முதலான இயற்கைத் தெய்வங்களில் ஒருவராக வணங்கப்பட்ட சூரியன் , மித்ரன் முதலான பெயர்களிலும், அழைக்கப்பட்டார்.[43] இக்கோயிலில் சூரியனது படிமம் முதல் திருச்சுற்றில், தனிச்சன்னதியில் பரிவார தேவதைகளில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

**சிற்றுருவச் சிற்பங்கள்**

புத்தமதக் குடைவரைக் கோயில்களில் உள்ள தூண்களில் முதன்முதலில் சிற்றுருவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. இச்சிற்பங்கள் கோயில்களில் அதிட்டானத்தின் வியாழ வரிமானத்திற்கு மேலேயும் , சில கோயில்களில் தேவகோட்ட அரைத்தூண்களுக்குக் கீழேயும்

ISSN: 2582-9513

காணப்படும். இச்சிற்பத் தொகுப்பானது புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும். இவ்வாய்விற்குரிய முதலாம் ஆதித்தன் காலத்திய திருவெறும்பூர்க் கோயில் கருவறை அதிட்டானத்தில் முப்பட்டைக்குமுதம் மற்றும் பட்டிகையை தொடர்ந்து வரும் கண்டப்பகுதியிலும் , கருவறை மற்றும் அர்த்த மண்டப தேவகோட்டத்தின் மீதான தோரணத்தின் மையத்திலும் சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.[44]

**தோரணச் சிற்பங்கள்**

தோரணம் என்பது நுழைவாயில் அல்லது தேவகோட்டத்தின் மீது அமைக்கப்படும் அலங்கார வேலைப்பாடு ஆகும். இக்கோயில் கருவறை தேவகோட்டம் மீதான தோரணங்கள் மகர தோரணங்களாக விளங்குகின்றன.

இதில் மகரங்களின் வாயிலிருந்து வெளிப்படும் கத்தி , கேடயத்துடன் கூடிய வீரர்களும் , அன்னங்களும், தோரணத்தைச் சுற்றிலும்கொடிக்கருக்குகளால் ஆன அலங்கார வேலைப்பாடுகளும் , இதன் மையத்தில் சிற்றுருவச் சிற்பங்களாக தெற்கில் நடராசரும் , மேற்கில் யோக நரசிம்மரும், வடக்கில் பிரம்மனும் காணப்படுகின்றனர். முதலாம் ஆதித்தன் காலத்திய திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் , ஸ்ரீநிவாசநல்லூர் குரங்கநாதர் கோயில், கீழையூர் அகத்தீசுவரர் கோயில் ஆகியவற்றில் தேவக்கோட்டங்களின் மீதான மகரதோரணம் இடம்பெறுகிறது.

**முடிவுரை**

தமிழகத்தில் சோழர்களின் ஏறக்குறைய 430 ஆண்டுகால ஆட்சியைத் திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் முழுமை பெற்ற காலம் எனலாம். விசயாலயன் சோழப் பேரரசைத் தோற்றுவித்துக் கற்றளிகளை எடுப்பித்தபோதிலும் கூட சோழர் கலைப்பாணி என்பது

ISSN: 2582-9513

முதலாம் ஆதித்தன் காலத்திலிருந்து தொடங்குவதாகவே கருதப்படுகிறது. இவை சோழர் கலைக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் (கி.பி. 600 - 630) சமகாலத்தைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்படும் திருநாவுக்கரசர் திருவெறும்பூர் இறைவன் குறித்துத் தமது 5ஆம் திருமுறையில் 74ஆம் பதிகத்தில் 10 பாடல்களும், 6ஆம் திருமுறையில் 91ஆம் பதிகத்தில் 10 பாடல்களையும் பாடியுள்ளார் .

மேற்கூறிய இவரது பாடல்கள் சிவனது பல்வேறு வடிவங்களை விளக்கிடும் வகையில் அமைந்துள்ளது. இதனடிப்படையில் இக்கோயில் நாவுக்கரசர் காலத்திலேயே இருந்ததை அறியமுடிகிறது. மேலும், அந்நாட்களில் இவை மண்தளியாக இருந்திருக்கலாம் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

மேற்கூறிய இலக்கியத் தரவுகளின் அடுத்த நிலையில் கல்வெட்டுச் சான்றுகள் இக்கோயில் பற்றிய செய்திகளை அறிய உதவுகின்றன.இவற்றின் வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் , திருவெறும்பூர்க் கோயில் முதலாம் ஆதித்தன் காலத்தைச் சேர்ந்தவை என்பதை இங்குள்ள இவனது கல்வெட்டு உறுதி செய்கின்றன.

மேலும் இக்கோவில் இறைவன் ஒவ்வொரு மன்னர்களது ஆட்சிக் காலத்திலும் பல்வேறு பெயர்களில எவ்வாறு அழைக்கப்பட்டு வந்துள்ளார் என்பதையும் , சத்திரம் எனப்படும் சோறிடும் சாலை செயல்பட்டு வந்ததையும் , பெருங்குறி சபையினர் ஊர்ப் பொது மண்டபத்தில் கூடி எடுப்பித்த முடிவுகள் பற்றி அறிய முடிகிறது.

திருவெறும்பூர்க் கோயில் முதலாம் இராசராசனது 25ஆம் ஆட்சியாண்டில் விளநாட்டிலும், முதலாம் இராசேந்திரனது 5 மற்றும் 7 ஆம் ஆட்சியாண்டில் வடகவிரநாடு மற்றும் மீகோலை நாட்டிலும் அமைந்திருந்ததை இக்கோயில் கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

திருவெறும்பூர்க் கோயில் கருவறை முதல் ஸ்தூபி வரை முதலாம் ஆதித்தனது பழைய கட்டுமானங்களைப் பெற்றுத் திகழ்வதை அறியமுடிகிறது.

கழுத்தில் அக்கமாலைகள் அணிந்தும் , நடராசரின் நடனக் கோலங்களை வெளிப்படுத்தும் வகையிலும் , கைகளில் பாம்பு மற்றும் பல்லியுடனும் காணப்படும் பூதகணங்கள் சிறப்பானவை.

இக்கோயில் கருவறையின் மேற்குத் தேவக்கோட்டத்தில் காணப்படும் அரிஅரர் சிற்பம் பிற கோயில்களில் காணப்படாத ஒன்றாகும். அர்த்தநாரீசுவரர் சிற்பத்தில் உமைக்கு வழங்கப்பட்ட இடப்பாகம் இச்சிற்பத்தில் திருமாலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் இங்கு அர்த்தநாரீசுவரர் இடம்பெற்று பின்னர் அரிஅரர் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதில் காணப்படும் முகத்தோற்றம் , முத்திரைகள், கைகளில் கருக்கு அலங்காரங்கள், ஆடை அணிகலன்கள் அடிப்படையில் இச்சிற்பம் முற்காலச் சோழர் கலைப்பாணியுடன் (கி.பி. 10 ஆம் நூ) விளங்குவது அறியப்படுகிறது.

## துணைநூற்பட்டியல்

### முதன்மைச் சான்றுகள் (Primary Sources)

### கல்வெட்டுச் சான்றுகள்

1. Annual Report of Indian Epigraphy, 100 -101 of 1892, 664- 697 of 1914, 181-188 of 1907, 96 -142 of 1914, Archaeological Survey of India, Delhi.
2. Epigraphica Indica, Vol. XI.
3. Gazetteers of Tamil Nadu, Thiruchirappalli District, Vol. I, (ed.,) K,S., Velmani, 1998.
4. Glossary of Tamil Inscriptions, Vol.I, Santi Sadhana Publications, Chennai, 2002.

ISSN: 2582-9513

**இலக்கியச்சான்றுகள்**

5. **திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்** ,(4,5,6 திருமுறைகள்), வரலாற்று முறையில் மூலமும் உரையும் , (பதி.,) பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2003.

6. **திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் ,** (1,2,3 திருமுறைகள்), வரலாற்று முறையில் மூலமும் உரையும், (பதி.,) பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், சென்னை, 2004.

7. **புறநானூறு மூலமும் உரையும்** , (பதி.,) அ.மா. பரிமணம் , கு.வெ. பாலசுப்பிரமணியர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

**இரண்டாம்நிலைச் சான்றுகள்**

8. சீனிவாசன், கே.ஆர்., தென்னிந்தியக் கோயில்கள் , நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, 1966.

9. நீலகண்ட சாஸ்திரி , கே.ஏ. சோழர்கள் , புத்தகம்,1,2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1989.

10. பாலசுப்பிரமணியன். குடவாயில். , தமிழகக் கோயிற்கலை மரபு , சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 2005.

11. Balasubramanyam, S.R., Early Chola Temples, Oriente Longman, New Delhi, 1971.

12. Banerjea, J.N., The Development of Hindu Iconography, Munshiram Manoharlal Publication, New Delhi, 1974.

13. Kinsley, David., Hindu Goddesses, Motilal Banarsidas, Delhi, 1987.

14. Marshall. Sir. John, Mohenjo Daro And The Indus Civilization, Asian Educational Services, New Delhi, 1996.

15. Nagaswami, R., Art and Culture of Tamil Nadu, Sundeep Prakasam, New Delhi, 1980.

16. Rao, Gopinatha, Elements of Hindu Iconography Vol.11, Pt.11, Indological Book House, Varanasi, 1971.

17. Sastri, Krishna, H.K., South Indian Images of Gods and Goddeses, Asian Educational Service, New Delhi, 1986.

18. Sastri, Nilakanta, K.A., A History of South India, Oxford University Press, Chennai, 1972.

19. Srinivasan, K.R., The Dharmaraja Ratha And Its Sculptures, Mahapalipuram, New Delhi, 1975.

20. Srinivasan, K.R., Temples of South India, Delhi, 1972.

21. Subbarayalu, Y., Political Geography of the Chola Country, Madras, 1973.

## மேற்கோள்கள்

1. K.A. Nilakanta Sastri, The Cholas, PP 21 - 22.
2. திருஞானசம்பந்தர் தேவாரம், 1: 4:1-2.
3. திருநாவுக்கரசர் தேவாரம், 5:74:1:3.
4. மேலது, 5:74: 3:3.
5. மேலது, 5:74: 4:2.
6. மேலது, 6:91: 3:5.
7. கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, சோழர்கள், தொகுதி-1, ப.35.
8. K.A. Nilakanta Sastri, A History of South India, P.82.
9. T.A.S. Vol.III, No.34, Verse 55.
10. தென்னிந்தியக் கல்வெட்டு, தொகுதி-13, எண்.88.
11. மேலது, தொகுதி-13, எண்.287.
12. பிராமண ஊர்ச்சபைக்கூட்ட உறுப்பினர்கள் பெருங்குறி சபை என வழங்கப்பட்டனர் (Glossary of Tamil Inscriptions, Vol.1, P.451).

13. நிலங்களின் மீதான சில குறிப்பிட்ட வரிகளிலிருந்து மட்டும் வரிவிலக்கு செய்யப்படுவது இறையிலி எனப்படும். (சோழர்கள் , புத்தகம் 2, ப.705).

14. கல்வெட்டு ஆண்டறிக்கை, 1914, எண்.111.

15. பிராமணர்களுக்கு அளிக்கப்பெற்ற நிலங்கள் பிரம்மதேயங்கள் எனப்பட்டன. அவை வரிநீக்கி இறையிலியாக வழங்கப்பட்டன.

16. கோயில்களுக்கு அளிக்கப்பெற்ற தானங்கள் தேவதானம் என வழங்கப்பட்டன.

17. க.ஆ., 1914, எண்.123.

18. தெ.இ.க., தொகுதி - 13, எண்.51.

19. செலுத்தவேண்டிய வரிக்காக முன்கூட்டியே செலுத்தப்படும் முதல் ஆகும்.

20. தெ.இ.க., தொகுதி - 4, எண்.549.

21. க.ஆ., 1914, எண்.101.

22.தெ.இ.க., தொகுதி-13, எண் 164.

23. க.ஆ., 1914, எண்.133.

24. தெ.இ.க., தொகுதி-19, எண் 372.

25. க.ஆ., 1914, எண்.116.

26. க.ஆ., 1914, எண்.98.

27. பாண்டிகுலசனி வளநாடு என்பது காவிரியின் கிழக்கே திருவையாறு முதல் மேற்கே ஸ்ரீரங்கம் வரை பரவியிருந்தது. (Y. Subbarayalu, Political Geography of the Chola Country, P.27).

28. தெ.இ.க., தொகுதி-4, எண் 548.

29. க.ஆ., 1914, எண்.100.

ISSN: 2582-9513
30. க.ஆ., 1914, எண்.140.

31. க.ஆ., 1914, எண்.136.

32. அகநானூறு, 307:11, 287:5.

33. Michael W.Meister, An Encyclopedia of Hindu Architecture, P.28.

34 Ibid, PP - 150 - 155.

35. K.R. Srinivasan, The Dharmaraja Ratha and Its Sculptures, Mahapalipuram, PP 13-15.

36. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் , முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப.74, 86, 96, 125, 148.

37. J.N. Banerjea, Development of Hindu Iconography, P.36.

38. Sir John Marshall, Mohenjio - Daro and the Indus Civilization, PP 44-49.

39. குடவாயில் பாலசுப்பிரமணியன், தமிழகக்கோயிற்கலை மரபு, ப.47.

40. புறநானூறு, 198:9.

41. T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol.1, Pt.11, PP 332-333.

42. David Kinsley, Hindu Goddesses, P.95.

43. H. Krishna Sastri, South Indian Images of Gods and Goddesses, P.90.

44. S.R. Balasubrahmanyam, Early Chola Temples, P.327.